## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1) 2019 ஆம் ஆண்டுக்கான "உலக தண்ணீர் தினத்தின்" கருப்பொருள் என்ன?**

[A] Water for All
[B] Nature for Water
[C] leaving no one behind
[D] Better water better jobs

- ✓ உலக தண்ணீர் தினம் **(WWD)** எல்லா வருடமும் மார்ச் **22**ஆம் தேதியும் அனுசரிக்கப்ப் படுகிறது. வீடுகளில், கல்வியிடங்களில், வேலையிடங்களில், விவசாயத்தில் உண்டாகியிருக்கக் கூடிய தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளவே இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ உலகத்தில் இருக்கக்கூடிய நன்னீர் அளவின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு நடக்கவும், நன்னீர் இருப்பை நிலைத்திருக்கும் படியாக தண்ணீர் நிர்வாகத்தை மேம்படுத்தவும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- ✓ தண்ணீர் பிரச்சனைகளைப் பற்றி ஊன்றி அறியவும், அதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி வழிகாட்டி, தண்ணீரைச் சிக்கனப்படுத்தி மாற்றத்தை உண்டாக்கவும், இத்தினம் வாய்ப்பளிக்கிறது. வாழ்க்கையின் அடிப்படைக் கட்டுமான பொருள் நீரே. தாகம் தணிக்கவும் உடல்நலம் பேணவும் மட்டுமேயல்ல நீர். நீர் புதுத் தொழில்களை உருவாக்கவும், பொருளாதார , சமூக மற்றும் மனித முன்னேற்றத்திற்கும் முக்கியமான பங்காற்றுகிறது.
- ✓ **2019** ஆம் ஆண்டின் கருப்பொருள் **"leaving no one behind" 2030** ஆண்டிலும் தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கான , நீர் நிர்வாகத்தைக் குறையின்றி பேணவும் என குறிக்கோளைக் கொண்டு செயல்படுகிறது. **"leaving no one behind"** என்ற கருப்பொருளின் பெயருக்கேற்றபடி இருக்கிறது.

**2) எந்த நாடு, தனது தலைநகரின் பெயரை "நூர்சுல்தான்" என்று அதிகாரப்பூர்வமாக மாற்றியிருக்கிறது?**

[A] கஸகஸ்தான்
[B] கிர்கிஸ்தான்
[C] தஜிகிச்தான்
[D] உஷ்பெகிஸ்தான்

- ✓ கஸகஸ்தான் தனது தலைநகர் "அஸ்டானா" நகரை "நூர்சுல்தான்" என்று சமீபத்தில் அதிபர் பதவியிலிருந்து விலகிய தங்கள் பெருமைமிகு தலைவர் "நூர்சுல்தான் நாசர்பாயேவ்"வின் நினைவில் சூட்டியுள்ளது.

- ✓ **Kassym-Jomart Tokayev** அதிபராக பதவியேற்ற பிறகு இந்த பெயர் மாற்றம் நடந்தது. அவர் தனது பதவிக்காலம் ஏப்ரல் **2020** இல் முடியும் வரை அதிபராக இருப்பார்.
- ✓ திரு நூர்சுல்தான் நாசர்பாயேவ் கஸகஸ்தானை சோவியத் நாடுகள் வீழ்ந்த **1991** இல் இருந்து, கஸகஸ்தானுக்கு விடுதலை கிடைப்பதற்கு முன்பிருந்து ஆண்டு வருகிறார்.
- ✓ திரு நூர்சுல்தான் அந்நாட்டு அரசியலைப்பின் படி, " தேசத்தலைவர்" என்ற பட்டத்தோடும், பாதுகாப்பு கவுன்சிலின் தலைவராகவும், நூர் ஒட்டான் கட்சியின் தலைவராகவும் தொடர்வார். அஸ்டானா நகரம் இதற்கு முன்பு பல பெயர்களைக் கொண்டிருந்தது. அவை: அக்மோலா, ட்செலினோக்ராட், அக்மோலின்ஸ்க்.

**3) சமீபத்தில் காலமான ஹக்கூ ஷா, எந்தத் துறையைச் சேர்ந்த பிரபலம்?**

**[A]** பத்திரிக்கைத் துறை

**[B]** அறிவியல்

**[C]** கலை

**[D]** விளையாட்டு

- ✓ ஹக்கூ ஷா**(85)** புகழ்பெற்ற இந்திய ஓவியர், கடந்த மார்ச் **21** ஆம் தேதி குஜராத், அகமதாபாத்தில் காலமானார். பழங்குடி மரபின் ஓவியங்களுக்காகவும், பழங்குடியின கலைக்காகவும் அறியப்பட்ட இவர், மார்ச் **26 1934**இல் பிறந்தார். **K.G.**சுப்ரமணியம் போன்ற புகழ்பெற்ற ஓவியர்களின் மாணவராக நுண்கலையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.
- ✓ அவருடைய கலைப்பங்களிப்பில் பெரும் பகுதி பழங்குடியின கலை, கலாச்சார பாதிப்பையும், பக்தி இயக்கத்தின் பாதிப்பையும் கொண்டிருந்தது, குறிப்பாக நிர்குனா கவிதையின் தாக்கம் அதிகமாக இருந்தது.
- ✓ ஷா, கலாச்சார மானுடவியலாளரும் கூட. கிராமிய, பழங்குடி கலை , கைவினை, பாரம்பர்யம், நாட்டார்கலைகள் பற்றி மிக ஆழமான கள ஆய்வு செய்து அவற்றை ஆவணப்படுத்தி குஜராத்தின் வித்யாபீட் என்ற இடத்தில் ஒரு பழங்குடி அருங்காட்சியகத்தை உருவாக்கியுள்ளார்.
- ✓ ஹக்கூ பாய் என்று பிரியமாக அழைக்கப்பட்ட, விருதுகள் வாங்கிய ஓவியர், தனது முயற்சியால் **1980** களில் ராஜஸ்தான் உதய்பூரில், "ஷ்ல்ப்க்ராம்" என்ற கைவினைக் கலை கிராமத்தை உருவாக்கினார்.
- ✓ ஷா, தனது நினைவோடைகளை "மனுஷ்" என்ற தலைப்பில் **2009** இல் புத்தகமாக வெளியிட்டார். **1989** இல் பத்மஸ்ரீ விருதையும், ஜவஹர்லால் நேரு தோழ்மை விருதையும் கலாரத்னா விருதையும் வாங்கியுள்ளார்.

**4) சமீபத்தில் "ஃபிட்ச் ரேட்டிங்ஸ்" 2020 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி ஏழில் இருந்து எத்தனை சதவீதம் குறையுமென்று கணித்திருக்கிறது?**

[A] 6.9%
[B] 6.8%
[C] 6.6%
[D] 6.5%

- ✓ ஃபிட்ச் ரேட்டிங்ஸ், தனது உலகளாவிய பொருளாதாரக் கண்ணோட்டத்தில் **(Global economic outlook GEO)** அறிக்கையில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி **7**இல் இருந்து **6.8**ஆக மாறி எதிர்பார்த்ததைவிட குறைவான வளர்ச்சியைப் பெறுமென்று கணித்திருக்கிறது.
- ✓ ஃபிட்ச் ரேட்டிங்கின் படி இந்தியா **2019** ஃபிப்ரவரியில் நடந்த கூடுகையில் பொருளாதார கொள்கையில் மிதமான போக்கை கடைபிடிக்க முடிவெடுத்ததும், வட்டி விகிதத்தை **0.25** சதவீதம் குறைத்ததும் இந்தியாவின் பணவீக்கத்தை அதிகப்படுத்தும்படியாக அமைந்துவிட்டது என்று கூறப்படுகிறது.
- ✓ ஃபிட்ச் ரேட்டிங் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சியை டிசம்பர் **6**இல் எதிர்பார்க்கப்பட்ட **7.8%** இல் இருந்து **7.2%** ஆக குறையும் என்று கணித்திருக்கிறது. போலவே, **2020** நிதியாண்டின் வளர்ச்சியை **7.3**இல் இருந்து **7**ஆகவும், **2021** நிதியாண்டு வளர்ச்சியை **7.3**இல் இருந்து **7.1** ஆகவும் குறைத்து மதிப்பிட்டுள்ளது.

**5) எந்த இந்திய நிறுவனம், “ஃப்ரென்ச் ஓப்பன்” போட்டிகளுக்கு டிஜிட்டல் துறையில் பக்கபலமாக இருக்கப்போகிறது?**

[A] டாட்டா
[B] ரிலையன்ஸ்
[C] விப்ரோ
[D] இன்ஃபோஸிஸ்

- ✓ இந்திய தொழ்ல்நுட்ப நிறுவனம் இன்ஃபோஸிஸ், ரோலாண்ட் காரோஸ் என்றழைக்கப்படும் ஃப்ரென்ச் ஒப்பன் போட்டிகளுக்கு, தொழில்நுட்பரீதியாக தீர்வுகள் வழங்க மூன்று வருடத்திற்கு , கூட்டுறவு ஒப்பதத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ **2019-2021** வரை நீளும் இவ்வொப்பந்தப்படி, டென்னிஸ் வீரர்கள், ரசிகர்கள், பயிற்சியாளர்கள்
- ✓ இன்போஸிஸ், ரோலாண்ட் காரோஸ் கூட்டுறவின் ஒரு பகுதியாக பார்வையாளர்களுக்கு டிஜிட்டலில் புதுஅனுபவங்களைக் குடுக்கக் கூடிய சாதனங்களை உருவாக்க இருக்கிறது.

- ✓ தரவுகள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் ரசிகர்களால் வேகமாக கணித்து கற்பனை செய்துபார்க்கும் வசதிகளை ஏற்படுத்தி அதன்மூலம் நேரடியாக ஸ்கோர்களைப் பெற்று அதன் மூலம் ஆட்டத்தின் போக்கை கணிக்க முடியும். இக்கருவி ரோலாண்ட் காரோஸா நிறுவன அதிகாரப்பூர்வ இணையத்தளத்தில் கிடைக்கும்படியாக அமைக்கப்படும்.

**6) ஆசிய ஒலிம்பிக் போட்டி கவுன்சிலில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய ஹாக்கி விளையாட்டு வீரர் யார்?**

**[A]** மன்ப்ரீட் சிங்

**[B]** சந்தீப் சிங்

**[C]** சர்தார் சிங்

**[D]** திலிப் டிர்க்கே

- ✓ பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் கவுன்சிலின் பொதுச்சபைக் கூட்டத்தில் தடகள விளையாட்டு கமிட்டியின் உறுப்பினராக இந்திய ஹாக்கியணியின் முன்னாள் கேப்டன் சர்தார் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ சர்தார் சிங்கைப் போலவே இந்தியாவைச் சேர்ந்த **IOA** செக்கரட்டரி ஜெனரல் ராஜீவ் மேத்தா கலாச்சார கமிட்டி உறுப்பினராகவும், இந்திய ஹாக்கி கமிட்டியின் செகரட்டரி ஜெனரல் முஷ்டக் அகமது ஊடகத்துறை கமிட்டி உறுப்பினராகவும், இந்திய தடகள கூட்டமைப்புத் தலைவர் அதிலா சுமரிவாலா சூழலியல் விளையாட்டுக் கமிட்டியிலும், லலிட் பானோட் விளையாட்டுத்துறையிலும் உறுப்பினராகியுள்ளனர்.
- ✓ இவர்கள் **2019** இல் இருந்து **2023** நான்காண்டுகளுக்கு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆசிய ஒலிம்பிக் கவுன்சிலின் பொதுச்சபைக் கூட்டம் கடந்த மார்ச் **2** மற்றும் **3**ஆம் தேதிகளில் பாங்காக்கில் நடைப்பெற்றது.

**7) இந்தியாவின் ஆழமான சுரங்கக் குகைகள் எந்த மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?**

**[A]** மேகாலயா

**[B]** அருணாச்சல் பிரதேசம்

**[C]** அசாம்

**[D]** ஒடிஷா

- ✓ இந்தியாவின் ஆழமான சுரங்கக் குகைகள் மேகாலயாவின் கிழக்கு காசி மலைப்பகுதியைச் சேர்ந்த **krem um ladaw** என்ற பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேகாலயிவின் குகைகளை ஆராயும்

திட்டமான "**Caving in the abode of cloud expedition**" இன் **28**ஆவது அமர்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- ✓ **24583** மீட்டர்கள் தூரம் கொண்ட க்ரேம் பூரி குகைகள் **2016**ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது ஆனால் அதன் உண்மையான தூரம் மேகாலயா சாகச சங்கத்தின் **(Meghalaya adventure association)** பயணமொன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ✓ இக்குகைகளில் டினோசர்களின் பதை வடிவங்கள்**(fossils)** குறிப்பாக **66-76** மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்த **Mosasaurus,** என்ற டினோசரின் பதை வடிவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேகாலயா உலகின் மிகமுக்கியமான குகைப் பகுதிகள் கொண்ட பிரதேசமாக ஆகியுள்ளது.

**8)** இந்தோ பிசிபிக் கூட்டமைப்பின் **(HLD-IPC)** உயர்மட்ட ஆலோசனைக்கூட்டம் முதல்முறையாக எந்நகரத்தில் நடைபெற்றது

**[A]** பெர்லின்

**[B]** நியூ டெல்லி

**[C]** ஜகார்த்தா

**[D]** பாரிஸ்

- ✓ இந்தோ பிசிபிக் கூட்டமைப்பின்**(HLD-IPC)** உயர்மட்ட ஆலோசனைக்கூட்டம் இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்றது. இதன் கருப்பொருள் **'Towards a Peaceful, 'Prosperous, and Inclusive Region'.**
- ✓ இந்தக்கூட்டத்தை இந்தோனேசிய அரசு ஒருங்கிணைத்தது இதில் இந்தியா உட்பட பதினெட்டு உறுப்பினர் நாடுகள் பங்கேற்றன.
- ✓ பாரத பிரதமர் மோடியின் **2018** சங்க்ரிலா பேச்சின் சாரத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது இந்தியாவின் பங்கேற்பு.
- ✓ இந்தப்பேச்சுவார்த்தையின் நோக்கம் தனது உறுப்பினர் நாடுகளை வெளிப்படையாக உரையாடி இந்திய பசிபிக் பகுதியில் அமைதியும் ஒருங்கிணைவும் நிகழ முன்னெடுப்புகளை செய்யத்தூண்டுவதாகும்.
- ✓ இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றவர்கள் மூன்று தலைப்புகளின் உரையாடினர். நீடித்த முன்னேற்றத்திற்கான குறிக்கோள்கள், கடற்புர கூட்டுறவு மற்றும் உள்கட்டமைப்பும் ஒருங்கிணைவும்.

**9)** சிக்கனமான விமான சேவையை வழங்கும் எந்த இந்திய நிறுவனம் சமீபத்தில் **IATA**வில் இணைந்திருக்கிறது?

[A] ஜெட்லைட்

[B] ஸ்பைஸ்ஜெட்

[C] இண்டிகோ

[D] ஏர் இந்தியா எக்ஸ்ப்ரஸ்

✓ குறைந்த விலையில் சேவை வழங்கி வரும் ஸ்பைஸ் ஜெட் நிறுவனம் உலக விமானப்போக்குவரத்து கூட்டமைப்பின் **(IATA)** உலகளாவிய உறுப்பினராகியிருக்கிறது.

✓ இதன்மூலம் ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் தனது மற்ற உறுப்பினர் நிறுவனங்களோடு இணைந்து பணியாற்றி வியாபாரத்தை பெருக்கி கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

✓ மேலும் இதன்மூலம் இந்நிறுவனம் தனது வியாபாரத்தை விரிவாக்கிக்கொண்டே போகமுடியும். **IATA** ஏர் இந்தியா, ஜெட் ஏர்வேஸ், விஸ்டாரா உள்ளிட்ட **290** விமான சேவை நிறுவனங்களை உள்ளடக்கியது.

**10) ஐக்கிய நாடுகளின் "உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில்" இந்தியா எந்த இடத்தை வகிக்கிறது?**

**[A] 116th**
**[B] 140th**
**[C] 135th**
**[D] 124th**

✓ **2019** உலக மகிழ்ச்சி தினத்தில், ஐக்கிய நாடுகள், **156** நாடுகளை உள்ளடக்கிய தனது ஏழாம் வருடத்திய "உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலை" வெளியிட்டது.

✓ இந்தியா இவ்வருடம் ஏழு இடங்கள் பின்தங்கி **140**ஆவது இடத்தைப் பெற்றது. இது **2005-2008** பட்டியலோடு ஒப்பிடும் போது மிகப்பெரிய சரிவைச் சந்தித்த **5** நாடுகளுள் ஒன்றானது இந்தியா. மற்ற நாடுகள் ஏமன், சிரியா பூட்ஸ்வானா மற்றும் வெனிசுலா.

✓ ஃபின்லாந்து தொடர்ந்து இரண்டாவது முறையாக மிக மகிழ்ச்சியான நாடாக தேர்வாகியிருக்கிறது. இதைத்தொடர்ந்து டென்மார்க் நார்வே நெதர்லாந்த் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன.

✓ இந்தப் பட்டியல் ஆறு காரணிகளைக் கொண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது. வருமானம், வாழ்க்கைத் தேர்வின் சுதந்திரம், உடல்நலம், சமுதாய ஒத்துழைப்பு மற்றும் பெருந்தன்மை. உலகில் சோகம் கவலை கோபம் போன்றவை அதிகரித்துள்ளதாகவும் அறிக்கை கூறுகிறது.

✓ பாகிஸ்தான் **67**ஆவது இடமும் பங்களாதேஷ் **125** சீனா **93** இடங்களைப்பெற்றுள்ளன. போர்சூழல் நிலவும் தெற்குசூடான் நாடுதான் இருப்பதிலேயே மகிழ்ச்சி குறைவான நாடாம். மத்திய ஆப்ரிக்க குடியரசு **155,** ஆப்கானிஸ்தான் **154** தான்சானியா **153** மற்றும் ருவாண்டா **152**வது இடங்களைப்பெற்றுள்ளன.